வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி
ZONAL EDUCATION OFFICE, VADAMARADCHY

# செயலட்டை

**பாடம்: பரதநாட்டியம்** **தரம்: 10**

1. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட அவதாரம் எடுத்தவர் யார்?
2. தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தபோது கயிறாகப் பயன்படுத்தப்பட்டது எது?
3. அவதாரம் என்றால் என்ன?
4. நீர்வாழ் உயிரிலிருந்து தொடங்கி படிப்படியான வளர்ச்சி நிலையில் தெய்வநிலை வரை எடுக்கப்படும் அவதாரம் எத்தனை வகைப்படும் ? அவை எவை?
5. சங்கு, சக்கரம் என்பவற்றின் தோற்றம் அவதாரத்தின் எந்த வகையாகும் ?
6. விஷ்ணுவால் எடுக்கப்பட்ட அவதாரம் எத்தனை? அவை எவை?
7. கலியுகத்தின் இறுதியில் கையில் ஒளிரும் வாளும் ஏந்தி வெள்ளைக் குதிரையில் வருவார் என எதிர்பார்க்கப்படும் அவதாரம் எது?
8. பாத்திரப் பிராணன் என்றால் என்ன?
9. பாத்திரப் பிராணன் பற்றி தமிழ் மொழியில் கூறப்படும் நூல் எது?
10. பாத்திரப் பிராணன்களை வேறு எவ்வாறு அழைப்பர் ?
11. "சிரத்தா" என்பதன் கருத்து யாது?
12. நர்த்தகியின் பகிப்பிராணன்கள் எத்தனை?
13. பகிப்பிராணன்கள் எவை?
14. சப்த தாளங்கள் 5 ஜாதியினால் வேறுபாடு அடைவதன் மூலம் எத்தனை தாளங்கள் உருவாகின்றன?
15. ஏழு தாளங்களையும் குறிப்பிடுக?
16. திஸ்ர ஜாதி துருவதாளத்தின் அடையாளம் யாது?
17. ஆகக்குறைந்த அட்சரங்களைக் கொண்ட தாளம் எது?
18. I9 I9 0 0இந்த தாளம் கொண்டுள்ள அட்சர எண்ணிக்கை யாது?
19. உலக இயல்பிற்குச் சற்று அப்பாற்பட்டு கலைவடிவத்திற்கு முதலிடம் அளிக்கும் தர்மி யாது?
20. பாத்திரங்களின் இயல்பான நடத்தையை காட்டும் தர்மி யாது?
21. "தெய் தெய் தத்தா" அடவின் தாளம் யாது?
22. 1வது தெய் தெய் தத்தா அடவில் பிரயோகிக்கும் முத்திரைகள் எவை?
23. "தெய் தெய் தாம்" அடவு அமைந்துள்ள தாளம் யாது?
24. "தெய் தெய் தாம்" அடவு முதலில் எந்தப்பக்கம் ஆரம்பிக்கப்படுகிறது?
25. தவிலின் வகைகள் எத்தனை? அவை எவை?
26. தவில் வாசிக்கப்பயன்படும் குச்சியின் பெயர் என்ன?
27. தவில் கழி எம்மரத்தால் செய்யப்படுகிறது?
28. வலதுகையில் என்ன போட்டு வாசிப்பார்கள் ?
29. தவிலின் மறுபெயர்களைத் தருக?
30. பெரிய உருவினையுடைய தவிலை எவ்வாறு அழைப்பர் ?
31. சிறிய உருவினை உடைய தவிலை எவ்வாறு அழைப்பர் ?
32. தவில் வாத்தியம் வாசிக்கப்படும் சந்தர்ப்பங்களை தருக?
33. தவில் கருவிக்கு துணைக்கருவியாக விளங்கும் வாத்தியம் எது?
34. தவிலில் வலந்தலை, இடந்தலை இருபக்கங்களிற்கும் பயன்படுத்தப்படும் தோல் யாது?
35. சிவபெருமானின் திருக்கரத்தில் உள்ள உடுக்கை எவ்வாறு கூறுவர் ?
36. உடுக்கை வேறு எவ்வாறு அழைப்பர் ?
37. உடுக்கை எத்தனை வகைப்படும் ? அவை எவை?
38. சிவனின் கையில் இருக்கும் உடுக்கை யாது?
39. கோயில் விழாக்களிலும், வழிபாட்டிலும் முழக்கப்படும் வாத்தியம் யாது?
40. இருமுகதோற்கருவியின் உடல் எதனால் ஆனது?
41. நீண்ட வார்களினால் சுற்றிக்கட்டப்பட்டதால் இதனை எவ்வாறு அழைத்தனர் ?
42. உடுக்கின் இருமுகங்களும் எதனால் போர்த்தப்பட்டிருக்கும் ?
43. இவ்வாத்தியம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை கூறுக?
44. உடுக்கை எவ்வளவு நீளமுடையது?

45. பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிளை பிறந்த ஆண்டு யாது?
46. இவர் எங்கு பிறந்தார் ?
47. இவரது தந்தை பெயர் யாது?
48. இவரது தாயார் பெயர் யாது?
49. இவரது தாயார் யாரின் புத்திரி?
50. இவர் இசை ஞானத்தை யாரிடம் கற்றார் ?
51. இவர் எத்தனை வயதில் பரதநாட்டியக் கலையைப் பயின்றார் ?
52. யாரிடம் பரதநாட்டியக் கலையைப் பயின்றார் ?
53. இவர் எங்கு குருகுலவாசம் செய்தார் ?
54. இவர் யாரின் மகளைத் திருமணம் செய்தார் ?
55. இவர் பரதநாட்டியம் பயில்வதற்காக எந்தமொழிகளில் பேசவும், சாகித்தியம் இயற்றவும் வல்லமை பெற்றிருந்தார் ?
56. இவர் சிவபிரான் மீது இயற்றிய உருப்படிகள் எவை?
57. பந்தணை நல்லூரிலிருந்து பரதநாட்டியக்கலையை யாருக்கு கற்பித்தார் ?
58. இவரின் ஆரம்பகால மாணவி யார் ?
59. கல்யாணி அம்மாளின் பிள்ளைகள் யாவர் ?
60. அவர்கள் யாரிடம் நாட்டியம் கற்றனர் ?
61. யாருடைய நாட்டியக் கச்சேரியை பார்த்தபின்னர் ஸ்ரீமதிருக்மணிதேவி பரதநாட்டியம் பயில்வதற்கு புத்துாக்கம் பெற்றார் ?
62. இவரின் திறமையை கண்டு ருக்மணிதேவி அவர்களுக்கு யார் அறிமுகம் செய்துவைத்தார்?
63. ஸ்ரீமதிருக்மணிதேவி தான் நிறுவிய கலை நிறுவனமாகிய கலாஷேத்திரத்திலேயே கலைப்பணி புரிய யாரை வரவழைத்தார் ?
64. கலாஷேத்திராவில் நடனம் கற்பிக்கும் பாணி யாது ?
65. இவர் தேர்ச்சி பெற்ற கிராமியக் கலைகள் எவை ?
66. இவரின் மருமகனான சொக்கலிங்கம்பிள்ளை எத்தனை ஆண்டு இவருடன் சேர்ந்து கலைத்தொண்டு புரிந்தார் ?
67. பிள்ளை அவர்களின் மாணவர்கள் சிலரைக் குறிப்பிடுக?
68. இவர் சமகால ராமநாதபுரம் சேதுபதிமன்னரின் முன்னிலையில் என்ன உருப்படியை கச்சேரி செய்து காண்பித்தார் ?
69. “ஜெயலக்சுமிக்கு” பெற்றுக் கொடுக்கப்பட்ட விருதுப்பெயர் என்ன?
70. இவரை எல்லோரும் எவ்வாறு அழைத்தனர் ?
71. இவர் தாம் உழைத்த பணத்தில் பாதிக்குமேல் எதற்கு செலவழித்தார் ?
72. இவரின் தோற்றம் எவ்வாறு காணப்படும் ?
73. இவர் தம்ழில் இயற்றிய கீர்த்தனைகள் எத்தனை?
74. கீர்த்தனைக்கு முதலில் அபிநயம் அமைத்தவர் யார் ?
75. பரதநாட்டியத்திலுள்ள பிரதான இரு பாணிகள் எவை?
76. இவருக்கு கிடைத்த பட்டம் யாது?
77. எத்தனையாம் ஆண்டு கிடைத்தது?
78. இப்பட்டத்தை யார் வழங்கியது?
79. தமிழ்நாட்டு அரசு இவருக்கு என்ன செய்தது?
80. இவர் என்னவாக விளங்கினார் ?
81. இவரை எவ்வாறு சிறப்பித்து கூறுவர் ?
82. இவர் இறைவனடி சேர்ந்த ஆண்டு எது?
83. தஞ்சைப் பெருங்கோயில் கட்டப்பட்ட நூற்றாண்டு எது?
84. யாரால் இக்கோயில் கட்டப்பட்டது?
85. தமிழர்களின் பாரம்பரிய சின்னமாக விழங்கும் கோயில் எது?
86. ஆரம்பத்தில் இக்கோயில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
87. தஞ்சையை நாயக்கர் ஆண்டபோது எவ்வாறு அழைக்கப்பட்டது?
88. தஞ்சைப்பெருங் கோயிலை மராட்டிய மன்னர் ஆண்ட போது எவ்வாறு அழைக்கப்பட்டது?
89. அவர்கள் எத்தனையாம் நூற்றாண்டில் ஆண்டார்கள் ?
90. தென்னாட்டுக் கோயில்களில் மிக உயர்ந்த விமானத்தை உடைய கோயிலை எவ்வாறு அழைப்பர் ?
91. இக் கோயிலின் நெடிதுயர்ந்த ஸ்ரீவிமானத்தின் பெயர் என்ன?

92. அங்கு காணப்படும் லிங்கத்திருமேனியின் உயரம் எவ்வளவு?
93. தஞ்சைப் பெரிய கோயில் ஆயிரம் ஆண்டு விழா எப்போது நடத்தப்பட்டது?
94. யாருடைய தலைமையில் இடம்பெற்றது?
95. இக்கோயிலை கட்டிய தலைமைச் சிற்பி யார் ?
96. இராஜராஜனின் விருதுப்பெயர்கள் எவை?
97. தஞ்சைப்பெருங் கோயிலில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் எத்தனை?
98. வான் கயிலாயம் எனக் குறிப்பிடப்படும் மலை யாது?
99. தட்சிணமேரு என்பதைக் கல்வெட்டில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?
100. ஊனக் கண்ணாற் தரிசிக்க முடியாத மலை எது?
101. தஞ்சைப் பெருஞ்கோயிலில் எத்தனை நாட்டிய நங்கையர் இருந்தனர் ?

## விடைகள்

1)விஷ்ணு
2)வாசுகிப் பாம்பு
3)மேலிருந்து கீழிறங்கல் எனப்பொருள்படும்
4)3
அவதாரம், ஆவேசம், அம்சம்
5)அம்சம்
6)10, மத்சய அவதாரம், கூர்ம அவதாரம், வராக அவதாரம், நரசிம்ம அவதாரம், வாமண அவதாரம், பரசுராம அவதாரம், ஸ்ரீராம அவதாரம், பலராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம்,
7)கல்கி
8)நாட்டியப் பெண்ணிற்கு இருக்கவேண்டிய முக்கிய பத்துக் குணங்களும் ஆகும்
9)மகாபாரத சூடாமணி
10)பாத்திர அந்தப்பிராணன்கள்
11)ஆர்வம்
12) 8
13)மத்தளம், தாளம், குழல், வீணை, சுருதி, கிண்கிணி, கீதம், நட்டுவன்
14) 35
15)துருவதாளம், மட்டியதாளம், ரூபகதாளம், ஜம்பதாளம், திரிபுடதாளம், அடதாளம், ஏகதாளம்.
16)I3 0 I3 I3
17)ஏகதாளம்
18)22
19)நாட்டியதர்மி
20)லோகதர்மி
21)ஆதி
22)கடகாமுகம், அலபத்மம்
23)ஆதி
24)இடது
25) 2 திமிரி, பாரி
26)தவில்கழி
27)திருவாட்டிமரம், பூவரசுமரம், சந்தனமரம்
28)கூடு
29)மங்கலவாத்தியம், இராஜவாத்தியம்
30)திமிரி
31)பாரி
32)ஆலயவழிபாட்டிலும், மங்களகரமான நிகழ்வுகளிலும்
33)நாதஸ்வரம்
34)ஆட்டுத்தோல்
35)துடி என்றும் டமருகம்
36)இடைசுருங்கிய தோற்பறை, இருமுகப்பறை
37) 2 சிற்றுடுக்கை, பேருடுக்கை
38)சிற்றுடுக்கை
39)பேருடுக்கை
40)வெண்கலம் அல்லது பித்தளை
41)உடுக்கை
42)கன்றின் தோலினால்
43)கரகம், காத்தவராயன் கூத்துக்கள், தெருப்பாடகர்கள், தேசிங்குராசன் கதை, நல்லதங்காள் கதை மற்றும் குறிசொல்வதற்கும், பேய் பிசாசுகளை விரட்டுவதற்கும்
44) 1 அடி
45)1869
46)தஞ்சை மாவட்டத்திலுள்ள கும்பகோணம் எனும் ஊரிலுள்ள பந்தனை நல்லூர் என்னும் கிராமத்தில்
47)சூரியமூர்த்தி நட்டுவனார்
48)ஞானாம்பாள்
49)தஞ்சை பொன்னையாவின்
50)மைத்துனரான குமாரசுவாமி நட்டுவனார்
51) 12
52)தஞ்சாவூர் சபாபதி நட்டுவனாரிடமும் மாமனார் மகாதேவ நட்டுவனாரிடமும்
53)தஞ்சையில்
54)மாமனாரின் மகளை
55)தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பேசவும், சாகித்தியம் இயற்றவும்
56)பதவர்ணங்கள், கீர்த்தனங்கள்
57)அயலிலுள்ள கிராமங்களிலிருந்தும் வந்த இளம் பெண்களுக்கு நாட்டியமும், ஆண்களுக்கு நட்டுவாங்கமும்
58)திருவனப் புத்தூரைச் சேர்ந்த கல்யாணி அம்மாள்
59)ஜீவரத்தினம், ராஜலக்ஷ்மி சகோதரிகள்
60)மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம்
61)ஜீவரத்தினம்
62)ஈ.கிருஷ்ணையர்
63) மீனாட்சிசுந்தரம்பிள்ளை
64)பந்தனை நல்லூர் பாணி
65)கும்மி, கோலாட்டம்
66) 40 ஆண்டுகள்
67) பந்தனை நல்லூர் தங்கைச்சியம்மா, பந்தனை நல்லூர் ஜெயலக்ஷ்மி ராம்கோபால், மிருணாளினி சாராபாய், தாராசௌத்ரி, பெங்களூர் கிருஷ்ணராவ், சந்திராபாகாதேவி, சாந்தாராவ் (மகன்) முத்தையாபிள்ளை
68)வாஸஸ்பதி இராகப் பதவர்ணம்
69)நிருத்திய சூடாமணி
70)தாத்தா
71) ஏழைகளுக்கும், கோவில்களுக்கும்

ZICTEC

72)அரையிலே நாலுமுழ வேட்டியும், சால்வையும் அணிந்திருப்பார்
73) 30
74) மீனாட்சிசுந்தரம்பிள்ளை
75) பந்தனை நல்லூர் பாணி, வழுவூர் பாணி
76)நாட்டியக்கலாநிதி
77) 1943
78)எழும்பூர் ஜகந்நாதசபா
79) 1948 ம் ஆண்டில் கும்பகோணத்தில் பாராட்டுப்பத்திரமும், பணமுடிச்சும் வழங்கியது
80)தமிழ்நாடு கௌரவிக்க முதல்வராக
81)பரதநாட்டிய குலகுரு
82) 1955
83) 10ம் நூற்றாண்டு
84)இராஜராஜசோழனால்
85)தஞ்சைப்பெருங்கோயில்
86)இராஜராஜேஸ்வரம்
87)தஞ்சைப்பெருவுடையார்
88)பிரகதீஸ்வரம்
89) 17ம், 18ம் நூற்றாண்டில்
90)பெரியகோயில்
91)தட்சிணமேரு
92) 13 அடி
93) 2010 செப்டெம்பர் 25, 26ம் திகதியில்
94)கலாநிதி பத்மா சுப்ரமணியம்
95)குஞ்சரமல்லன்
96)பாண்டிகுலாசனி, சத்ரியசிகாமணி, கேரளாந்தகன், அருள்மொழித்தேவன்
97) 81
98)பொன்மலை
99)தென்நாட்டு மலை
100)பொன்மலை
101)407

ZICTEC